**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG30 – நிலை 3 – (Grade 3)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Offline Examination)

**மே – சூன் 2019**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

## பிரிவு – 1

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. மரங்கள் எவ்வாறு இறைவனைப் போற்றும்?
2. திருக்குறள் எவ்வகைப் பாவகையைச் சார்ந்தது?
3. வெகுளி என்பதன் பொருள் யாது?
4. இலக்கியச் சுவைகள் எத்தனை?
5. மழை முகில் கண்டு வானில் பறந்து திரிவன எவை?
6. பாரதியின் முப்பெரும் படைப்புகள் யாவை?
7. வானம் பார்த்த பூமியாக அமைந்தது எது?
8. 'சோழநாடு சோறுடைத்து' எனப் பாடியவர் யார்?
9. எதனைப் பார்த்து மனிதன் வான ஊர்தியைக் கண்டுபிடித்தான்?
10. மூவேந்தர் என்று அழைக்கப் பெறுபவர்கள் யார்?

## பிரிவு – 2

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. சூரியன், பறவைகள், தாவரங்கள் இவை யாவும் எவ்வாறு இறைவனைத் தொழுகின்றன?
2. உலக மக்களை எவ்வாறு மதிக்க வேண்டும்?
3. தமிழின் சிறப்பினை ஓர் உவமையின் மூலம் விளக்குக.
4. தக்கார், தகவிலர் என்பது எதனால் காணப்படும்?
5. பெருமை, சிறுமை எனச் சிறுபஞ்சமூலம் கூறுவன யாவை?
6. நான்மணிக்கடிகை–பெயர்க் காரணம் தருக.
7. இக்கால இலக்கியம் என்று எதனைக் கூறுகிறோம்?
8. சித்திர சபையின் சிறப்புகள் யாவை?
9. காவிரி ஆறு, தமிழகத்தின் எப்பகுதிகளை வளப்படுத்துகிறது?

10. தமிழில் உள்ள காவியங்கள் சிலவற்றைக் கூறுக.
11. 'இரவு தங்குவதற்கு நல்ல இடம்' என்று மணி எதனைத் தேர்வு செய்தான்?
12. "கல்லணை" பற்றி எழுதுக.
13. சொல் என்றால் என்ன?
14. இடவாகுபெயர், காலவாகு பெயரை விளக்கி உதாரணம் தருக.
15. பகுபத உறுப்புகள் யாவை?

## பிரிவு – 3

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. நிலவையும் கதிரவனையும் மழையையும் "உலக வாழ்த்து" என்னும் பாடலில் இளங்கோவடிகள் போற்றுவது ஏன்?
2. சிறுபஞ்சமூலம் கூறும் அழகுகள் எவை?
3. "பாம்பெள்ளெனவே ஓது" – இரட்டுற மொழிதல் பாடலின் பொருளை விளக்குக.
4. "தனது உள்ளத்தைக் கொள்ளைக் கொண்ட திருடராக இருப்பவர்" யார் எனத் திருஞானசம்பந்தர் கூறுகிறார்? ஏன்?
5. "பதினெட்டாம் பெருக்கு" – விளக்குக.
6. ஐந்தருவி பெயர்களைக் கூறி, அதன் அழகினை விளக்குக.
7. மூன்று காலங்களையும் காலங்கட்டும் இடைநிலைகளையும் எழுதுக.
8. அறுவகை வினாக்களைக் கூறி, எடுத்துக்காட்டு தருக.

## பிரிவு – 4

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**
***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. "நடுவுநிலைமை" பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. "முக்கூடற் பள்ளு" பாடல் கருத்தை தொகுத்து எழுதுக.
3. அறுவகைப் பெயர்களை விளக்குக உதாரணம் தருக.

## பிரிவு – 5

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. "வான ஊர்தி" என்றப் பாடத்தலைப்பின் கீழ் ஒரு கட்டுரை வரைக.
2. வேற்றுமை உறுபுகள் என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

ஒலஒல